**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. செ. மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்:1956/Self-Defense/மாஒ6/ஒபக/2023, நாள்:05.12.2023**

பொருள்: வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2023-24_ஆம் கல்வியாண்டு – பள்ளி மாணவிகளுக்கான தற்காப்புக் கலைப் பயிற்சி – பள்ளிகளுக்கு வழிகாட்டுதல் நெறிமுறைகள் – நிதி விடுவித்தல் சம்பந்தமாக வட்டார வளமையங்களுக்கு – வழிகாட்டுதல் நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை: சென்னை-06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 4560/A16/self defense/SS/2023, நாள்:29.11.2023.

*******

பள்ளி மாணவிகள் எந்த ஒரு சூழலையும் பக்குவமாக எதிர்கொள்ளும் ஆற்றல் மற்றும் திறனை வளர்க்கும் வகையிலும், இடைநிற்றலை தவிர்த்து இடைநிலை மற்றும் மேல்நிலை கல்வியை தொடர்வதற்கு ஏற்ப Karate, Judo, Taekwondo, Silambam ஆகிய தற்காப்பு கலை பயிற்சிகள் மாணவிகளுக்கு தன்னம்பிக்கையை அளிக்கிறது. இப்பயிற்சி மாணவிகளுக்கு தன்னம்பிக்கை தருவதால், பாதுகாப்பிற்கு ஏற்புடையதாக அமைகின்றது.

பார்வையில் காணும் சென்னை-06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் கீழ் 140 அரசு நடுநிலைப்பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கும், 119 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கும், தற்காப்புக்கலை பயிற்சியளிக்க ஒவ்வொரு பள்ளிக்கும் மாதம் ரூ.5000/- (பயிற்சியாளர்களுக்கான ஊதியம் + மாணவர்களுக்கான சிற்றுண்டி செலவினம்) என 3 மாதங்களுக்கு ரூ. 15,000 வீதம் 259 பள்ளிகளுக்கு **ரூ.38.85** இலட்சம் மாநிலத்திட்ட அலுவலகத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் தற்காப்புக்கலை பயிற்சி வழங்கப்பட வேண்டிய பள்ளிகளின் எண்ணிக்கை வட்டாரம் வாரியாக கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வட்டாரம் | நடுநிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை | Unit Cost | விடுவிக்கப்பட வேண்டிய நிதி (ரூபாயில்) PAB Head 184, Self Defense Training – Elementary (upto Highest Class VIII) | உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | Unit Cost | விடுவிக்கப்பட வேண்டிய நிதி (ரூபாயில்) PAB Head 183, Self Defense Training – Secondary (upto Highest Class X or XII) | மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | e=c*d | | | h=f*g | i=c+f | j=i*15000 |
| a | b | c | d | e | f | g | h | i | j |
| 1 | Anaicut | 22 | 15000 | 330000 | 23 | 15000 | 345000 | 45 | 675000 |
| 2 | Gudiyatham | 31 | 15000 | 465000 | 24 | 15000 | 360000 | 55 | 825000 |
| 3 | K.V.Kuppam | 12 | 15000 | 180000 | 15 | 15000 | 225000 | 27 | 405000 |
| 4 | Kaniyambadi | 16 | 15000 | 240000 | 9 | 15000 | 135000 | 25 | 375000 |
| 5 | Katpadi | 27 | 15000 | 405000 | 13 | 15000 | 195000 | 40 | 600000 |
| 6 | Pernambut | 11 | 15000 | 165000 | 16 | 15000 | 240000 | 27 | 405000 |
| 7 | Vellore Rural | 14 | 15000 | 210000 | 11 | 15000 | 165000 | 25 | 375000 |
| 8 | Vellore Urban | 7 | 15000 | 105000 | 8 | 15000 | 120000 | 15 | 225000 |
| **Total** | | **140** | | **2100000** | **119** | | **1785000** | **259** | **3885000** |

**பள்ளிகளில் தற்காப்புக் கலை பயிற்சிகளை நடத்திடத் தேவையான நெறிமுறைகள்:**

- ஒவ்வொரு பள்ளிக்கும் மாதம் விடுவிக்கப்படும் தொகையான ரூபாய் 5000/-ல் பயிற்சியாளர்களுக்கான ஊதியம் ரூபாய் 4000/- மற்றும் மாணவிகளுக்கான சிற்றுண்டி செலவாக ரூபாய் 1000/- செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அந்தந்த பள்ளிகளுக்கு தேவையான தற்காப்புக்கலை மற்றும் பயிற்சியாளரை சார்ந்த **பள்ளி மேலாண்மை குழுக்களே** தேர்வு செய்தல் வேண்டும். மாவட்ட அளவிலோ வட்டார அளவிலோ தேர்வு செய்தல் கூடாது .
- EMIS தளத்தில் தற்காப்பு கலை பயிற்சி சார்ந்து கேட்கப்பட்ட தகவல்களை உரிய நேரத்தில் பள்ளி தலைமை ஆசிரியர் பதிவு செய்தல் வேண்டும்.
- பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த புகைப்படங்களுடன் கூடிய தொகுப்பு அறிக்கையை வட்டார ஊடக ஒருங்கிணைப்பாளர் வாயிலாகவும் ஒரு செயல் விளக்கத்தை பயிற்சி பெற்ற மாணவிகள் மூலமாகவும் தயார் செய்து அதன் காணொளி பதிவை ஆங்கில துணைத் தலைப்புகளோடு தயாரித்து முறையாக பராமரிக்கவும் சிறந்த தயாரிப்பை மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும் அனைத்து வட்டார ஊடக ஒருங்கிணைப்பாளர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு வட்டாரத்திலும் அனைத்து பள்ளிகளிலும் தேர்வு செய்யப்பட்ட தற்காப்பு கலை விவரம், பயிற்றுநர் விவரம், பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு விவரம், பயிற்சி

நடைபெறும் கால அட்டவணை ஆகிய விவரங்கள் மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- ❖ விடுவிக்கப்பட்ட நிதிக்கான முறையான பயன்பாட்டு சான்றிதழினை பயிற்சி முடிந்த ஒரு வார காலத்திற்குள் வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், பள்ளிகளில் இருந்து பெற்று மாவட்ட திட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- ❖ மாவட்ட அளவிலான மற்றும் வட்டார அளவிலான கள ஆய்வு அலுவலர்கள் அனைவரும் பள்ளிகளில் இவ்வாறான பயிற்சி நடப்பதை பார்வையிட்டு உறுதி செய்தல் வேண்டும்.

**தற்காப்புக்கலை பயிற்சிகளை பள்ளி அளவில் செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள் :**

1. கராத்தே, ஜீடோ, டேக்வேண்டோ, சிலம்பம் பயிற்சிகளில் ஏதேனும் ஒரு பயிற்சியை தேர்வு செய்து வாரத்தில் ஏதேனும் இரண்டு நாட்களில் ஒவ்வொரு பள்ளியிலும் இணைப்பில் கண்டுள்ள பாடத்திட்டத்தில் மூன்று மாதங்களுக்குக் கற்றுத் தருதல் வேண்டும்.
2. Elementary தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இணைப்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு இணைப்பில் கண்டுள்ள Syllabus -1 பாடத்திட்டத்தைப் பின்பற்றி பள்ளி வளாகத்தில் கற்றுத் தரப்பட வேண்டும்.
3. Secondary தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இணைப்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரைப்பயிலும் மாணவியர்களுக்கு இணைப்பில் கண்டுள்ள Syllabus - 2 பாடத்திட்டத்தைப் பின்பற்றி பள்ளி வளாகத்தில் கற்றுத் தரப்பட வேண்டும்.
4. ஒரு பள்ளியில் அதிகபட்சம் 100 மணவியர்களுக்கு மிகாமலும் குறைந்த பட்சம் 10 மாணவிகளுக்கு குறையாமலும் தற்காப்புக் கலைப்பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும்.
5. SMC, Alumini Sponsors_களிடம் தற்காப்புக்கலைப் பயிற்சிக்கு தேவைப்படும் உபகரணங்களை வாங்கலாம்.
6. எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு பள்ளியில் பயிலும் மாணவியர்களைப் பயிற்சிக்காக வேறு ஒரு பள்ளிக்கு அழைத்துச் செல்லுதல் கூடாது.
7. மாணவியர் விடுதியில் தங்கி பயிலும் மாணவியர்களுக்கு தற்காப்புக்கலை பயிற்சி அளிப்பதில் முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.
8. மாணவிகள் அன்றாடம் பயன்படுத்தும் ஆடை மற்றும் பிற பொருட்களை (Key chain, Duppatta, Stole, Mufflers, Bags, Pen, Pencil, Notebooks, Etc.,) கருவிகளாகக் கொண்டு ,ஆபத்து காலங்களில் தங்களை தற்காத்துக்கொள்ளும் பயிற்சிகளையும் அளிக்க வேண்டும்.
9. பெண் பயிற்றுநர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம். பெண் பயிற்றுநர்கள் இல்லாத நிலையில் ஆண் பயிற்றுநரை தேர்ந்தெடுக்கலாம். இந்நிலையில் பெண் ஆசிரியைகள் மேற்பார்வையில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.
10. பயிற்சியில் பங்கு பெறும் மாணவிகளுக்கு கட்டாயம் வருகை பதிவு செய்யப்பட வேண்டும்.

11. அந்தந்த தற்காப்புக் கலைக்குரிய முன்னேற்பாடுகளுடன் மட்டுமே பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். பங்கு பெறும் மாணவிகளின் பாதுகாப்பிற்கு உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.
12. சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் கலந்து பேசி நேர அட்டவணையை இறுதி செய்திட வேண்டும்.
13. ஒவ்வொரு பள்ளியிலும் SMC தீர்மானம் மற்றும் Skill Map – இன்படி, பயிற்சிக்கு பயிற்றுநர் நியமிக்கப்பட்டு, பயிற்சியானது திட்டமிடப்படி நடைபெறுதலை உறுதி செய்ய வேண்டும். **SMC குழு உறுப்பினர்கள் மாதம் இரு முறையேனும்** தற்காப்பு பயிற்சியை பார்வையிட வேண்டும். மாணவியர்களின் திறனுக்கு ஏற்ப பயிற்சி வழங்கப்படவேண்டும். பயிற்சி நடைபெறுவதை சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் உதவி தலைமை ஆசிரியர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் சார்ந்த அலுவலர்கள் மற்றும் SMC உறுப்பினர்கள் பார்வையிடுதல் வேண்டும்.
14. பயிற்சி சீரிய முறையில் நடக்க அந்தந்தப் பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் உறுதுணையாய் இருக்க வேண்டும்.
15. மாநிலத்திட்ட அலுவலக வழிகாட்டுதலின்படி

**தற்காப்புக் கலை பயிற்சி பயிற்றுநர்களை தேர்ந்தெடுக்கும்போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் :**

**கராத்தே பயிற்றுநர்களுக்கான கல்வித் தகுதி**

- குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு முடித்திருக்க வேண்டும்.
- தொழில்நுட்பக் கல்வித் தகுதிகள்
    - Karate / Judo / Taekwondo-வில் சான்றிதழ் பயிற்சி (Certificate Course)
    - Karate / Judo / Taekwondo-வில் பட்டயப்பயிற்சி (Diploma Course)
    - 1 ஆண்டு முதுநிலை பட்டயப் படிப்பு (PG in Diploma)
    - 'Word Karate Federation' மூலமாக வழங்கப்படும் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
    - Don 4th Degree in Karate (Black Belt) முடித்திருத்தல் வேண்டும்.
- கராத்தே பயிற்றுநர் சார்ந்து எவ்வித பணி நியமன ஆணையையும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலர்களோ அல்லது பள்ளித் தலைமை ஆசிரியரோ வழங்கக்கூடாது.
- பயிற்றுநர்களின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு தகுதியான பயிற்றுநர்கள் மட்டுமே பள்ளிகளில் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- ஒன்றியங்களில் பயிற்றுநர்கள் போதுமான அளவில் இருப்பின் தனித்தனி பயிற்றுநர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் ஒரே பயிற்றுநர் ஒன்றுக்கும் மேற்பட்ட பள்ளிகளில் பயிற்சியை நடத்தலாம்.
- பயிற்றுநர்களுக்கு எவ்வித பணி அனுபவச் சான்றிதழும் வழங்கக் கூடாது.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு, தெரிவுசெய்யப்பட்டு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அரசு

தற்காப்புக்கலைப் பயிற்சியினை நிபுணர்களைக் கொண்டு, குறிப்பிட்ட மாதங்களில் சிறப்பான முறையில் நடத்த அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் பணியினை மேற்கொள்ள வேண்டும்

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளவாறு அந்தந்த ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையை தற்காப்பு கலைப் பயிற்சிக்காக (PAB Head 184, Self Defense Training- Elementary- Upto highest class - VIII & PAB Head 183, Self Defense Training-Secondary- Upto highest class X or XII) என்ற நிதி தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, உரிய பள்ளிகளுக்கு விடுவிக்க ஏதுவாக மேலே கண்டுள்ள அட்டவணையின்படி அனைத்து வட்டார வளமையங்களுக்கும் நிதி விடுவிக்க அனுமதி ஆணை வழங்கப்படுகிறது.

**இணைப்பு:**

1. தெரிவு செய்யப்பட்ட பள்ளிகளின் பட்டியல்.
2. 6 முதல் 8 ஆம் வகுப்பிற்கான தற்காப்பு கலைப்பயிற்சிக்கான பாடங்கள்.
3. 9 முதல் 10 ஆம் வகுப்பிற்கான தற்காப்பு கலைப்பயிற்சிக்கான பாடங்கள்.
4. பயிற்சியாளர் செய்யக்கூடியவையும் மற்றும் செய்யக்கூடாதவையும் (Do's & Don'ts).
5. தற்காப்புக்கலை மாதிரி செயல் விளக்கப்படங்கள்.

05/12/23

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

05/12/2023

05/12/23

**பெறுநர்:**

1. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள் - இடைநிலை மற்றும் தொடக்கக்கல்வி.
2. வேலூர் மாவட்ட திட்ட அலுவலர் - தொடக்கக்கல்வி.
3. வேலூர் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
5. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரிய பயிற்றுநர்கள்,
6. சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள்

**நகல்:**

1. சென்னை-06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.